XSEED FOUNDATION FOR LIFE
idiscoveri

UNLEASH YOUR MIND®

**Publication :** Dina Thanthi

**Region :** Tiruppur

**Date :** Jan 10, 2011

# கருத்தரங்கம்

கோவை ஜன.10-

குழந்தைகளிடம் உள்ள திறமைகளை பெற்றோர்கள் கண்டுபிடித்து புரிந்து கொண்டு, அதை வெளிப்படுத்தி மேம்படுத்துவது பற்றிய கருத்தரங்கம் நாளைய குழந்தை என்ற தலைப்பில் கோவையில் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு ஆர்.வி.எஸ். கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் செந்தில் கணேஷ், ஐ-டிஸ்கவரி கல்வி அமைப்பின் நிர்வாக இயக்குனர் ஆஷிஷ் ராஜ்பால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

குழந்தைகள் வளர்ப்பு முறைகள், குழந்தைகளின் கல்வி மற்றும் படிப்பில் பெற்றோர்களின் பங்களிப்பு, கல்வி முறையில் உள்ள சவால்கள், ஆங்கில மொழித்திறன், பள்ளி கல்வி முறைகள் மற்றும் விழிப்புணர்வு பற்றி பெற்றோர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

கருத்தரங்கில் 350-க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் கலந்து கொண்டனர்.